| **பொருள்** | பிறரின் குறைகளையே பெரிதுபடுத்திக் கொண்டிருந்தால் உறவினர்களோ நண்பர்களோ யாரும் நம்மோடு இருக்க மாட்டார்கள். |



கற்றல் தரம் 4.2.3 ▪ மூன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் நோட்டுப் புத்தகத்தில் அழகுற எழுதப் பணித்தல்.

ந.நூ 50

தொகுதி 10

# கதை


## பாடம் 1 கதை கேள்

**கலந்துரையாடுக.**


நரி நீரைத் தேடி அலைந்தது. வழியில் கிணற்றைக் கண்டது. அதனுள் எட்டிப் பார்த்தது. அப்பொழுது தவறிக் கிணற்றுக்குள் விழுந்து விட்டது. வெளியே வரத் திட்டமிட்டது. அச்சமயம் ஆடு ஒன்று அவ்வழியே வந்தது. நரியின் தந்திரத்தால் ஆடு கிணற்றில் குதித்தது. உடனே, நரி ஆட்டின்மேல் ஏறி வெளியே வந்தது.




1. நரி ஏன் காட்டில் அலைந்தது?



2. நரி எப்படிக் கிணற்றில் விழுந்தது?



3. ஆடு ஏன் கிணற்றில் குதித்தது?



4. நரி எப்படி வெளியே வந்தது?

வருடுக

கற்றல் தரம் 1.4.3
- ஏன், எப்படி எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு
- QR குறியீட்டின் வழி கதையைச் செவிமடுத்துக் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறச் செய்தல்.

ந.நூ 51

## பாடம் 2 கதை நேரம்

**வாசித்திடுக.**


*கரடி ஒன்று* ***காட்டில்*** *சுற்றித் திரிந்தது. அப்பொழுது ஒரு மரக்கிளையில் தேன் கூட்டைக் கண்டது.*

1




*கூட்டிலிருந்து தேனீ ஒன்று பறந்து வந்து கரடியைக் கொட்டியது.*


2





3



கரடி குச்சி ஒன்றை எடுத்துக் கொண்டு மீண்டும் அங்கே வந்தது.





*கரடி அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.*


**பதிலளித்திடுக.**

1. எது காட்டில் அலைந்து திரிந்தது?
2. மரக்கிளையில் என்ன இருந்தது?
3. இக்கதை உணர்த்தும் படிப்பினை யாது?

## பாடம் 3 கதைகள் பலவிதம்

**வாக்கியம் அமைத்திடுக.**





1. **பறக்கும் தட்டு**

   தம்பி வானில் **பறக்கும் தட்டைப்** பார்த்தான்.




2. **உருவம்**

   தீபா விநோத **உருவத்தை** வரைந்தாள்.



3. **விண்வெளி**

   என் மாமா **விண்வெளிக்குச்** சென்றார்.



4. **பயந்தேன்**

   பாம்பைக் கண்டு **பயந்தேன்.**



5. **கிரகவாசிகள்**

   ______________________________

| கற்றல் தரம் 3.3.7 | ▪ எளிய வாக்கியம் அமைப்பர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • படங்களின் துணையுடன் எளிய வாக்கியம் அமைக்கப் பணித்தல். |

ந.நூ 55

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




### இரட்டைக்கிளவி

**தகதக** - செந்நிறமான ஒளி / கொழுந்துவிட்டு எரிதல்

**மளமள** - ஒன்றை விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் செய்தல்



கற்றல் தரம் 4.3.2
- மூன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- இரட்டைக்கிளவிகளையும் அதன் பொருளையும் கையெழுத்தாக எழுதப் பணித்தல்.

ந.நூ 56

தொகுதி 11

# நன்னெறி

## பாடம் 1 போற்றிடுவோம்

**பதில் கூறுக.**







எப்பொழுது?

எவ்வாறு?

1. தீபாவளி எப்பொழுது கொண்டாடப்படும்?


   தீபாவளி ஐப்பசி மாதம் கொண்டாடப்படும்.

2. எவ்வாறு கோலம் இடுவர்?

   புள்ளி இட்டுக் கோலம் இடுவர்.

# பாடம் 2 அறிவுடைமை


**வாசித்துப் பதிலளித்திடுக.**



தோட்டத்தில் திருடர்கள் **பதுங்கி** இருப்பதைத் தெனாலிராமன் கண்டார். உடனே வீட்டிற்குள் வந்து தம் மனைவியை எழுப்பினார்.



“திருடர்கள் அதிகமாகி விட்டனர். நம் வீட்டு நகைகளைக் **கிணற்றில்** போட்டு வை,” என உரக்கக் கூறினார். ஒரு பெட்டியில் கல், மண், பழைய பொருள்களை நிரப்பினார். அதை அவரின் மனைவி கிணற்றில் போட்டார்.






திருடர்கள் கிணற்றின் **அருகில்** வந்தனர்; நீரை இறைத்தனர். பொழுதும் விடிந்தது.

அப்பொழுது தெனாலிராமன் “தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நீர் கிடைத்துவிட்டது. மிக்க நன்றி,” என்று **கூறினார்**. திருடர்கள் ஏமாந்தனர். அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.


1. தெனாலிராமன் யாரைக் கண்டார்?
2. நகையை எங்கே போடச் சொன்னார்?

| | |
|---|---|
| கற்றல் தரம் 2.4.3 | ▪ கதை தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். |
| ஆசிரியர் குறிப்பு | • கதை தொடர்பான வினாக்களுக்கு நடவடிக்கை நூல் பக்கம் 58&59-இல் பதிலளிக்கப் பணித்தல். |


ந.நூ 58-59

# பாடம் 3 ஒற்றுமை


**வாசித்து எழுதிடுக.**




இரண்டு பூனைகள் ரொட்டித் துண்டைக் கண்டன.
அதனை உண்ணச் சண்டையிட்டன.



அவ்வழியே குரங்கு வந்தது. பூனைகளை ஏமாற்றத் திட்டம் போட்டது. பூனைகளின் சண்டையைத் தீர்ப்பதுபோல நடித்தது. ரொட்டியை இரண்டுத் துண்டுகளாகப் பிரித்தது.



ரொட்டித் துண்டுகளின் அளவு சமமாக இல்லை. அவற்றைச் சமமாக்கக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துத் தின்றது.



குரங்கின் சதியைக் கண்ட பூனைகள் தங்கள் தவற்றை உணர்ந்து வருந்தின.

| கற்றல் தரம் 3.1.14 | ▪ பத்தியைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • கதைக்கு ஏற்ற முகமூடி செய்து நடித்துக் காட்டப் பணித்தல். |

ந.நூ 60-61

# இலக்கணம்

**கலந்துரையாடுக.**

## தமிழைக் கற்போம் வாரீர்

நான்காம் வேற்றுமை உருபு (கு) க்குப் பின் **க்,ச்,த்,ப்** வரின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கவினுக்**கு** | + | **தா** | = | கவினுக்கு**த்** தா |
| பள்ளிக்**கு** | + | **போ** | = | பள்ளிக்கு**ப்** போ |
| பூட்டுக்**கு** | + | **சா**வி | = | பூட்டுக்கு**ச்** சாவி |
| கோழிக்**கு** | + | **தீ**னி | = | கோழிக்கு**த்** தீனி |
| தம்பிக்**கு** | + | **சொ**ல் | = | தம்பிக்கு**ச்** சொல் |
| அவனுக்**கு** | + | **கொ**டு | = | அவனுக்கு**க்** கொடு |
| தோழிக்**கு** | + | **க**டிதம் | = | |
| வேலனுக்**கு** | + | **பு**த்தகம் | = | |





கற்றல் தரம் 5.4.1


▪ இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு

• நான்காம் வேற்றுமை உருபுக்குப் பின் வலிமிகும் சொற்களை மின்னட்டையில் எழுதப் பணித்தல்.




# போக்குவரத்து




## பாடம் 1 பயண விவரம்

**கலந்துரையாடுக.**


**தாமான் வீரா தேசியப்பள்ளி மாணவர் பள்ளி செல்லும் முறை**


| எண்ணிக்கை / செல்லும் முறை | ஆண் | பெண் |
|---|---|---|
|  | 25 | 150 |
|  | 25 | 75 |
|  | 150 | 30 |
|  | 50 | 45 |
| மொத்தம் | 250 | 300 |




## பாடம் 2 நாங்கள் பேசினால்

**வாசித்திடுக.**







| | |
|---|---|
| கற்றல் தரம் 2.3.2 | ▪ கேலிச்சித்திரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். |
| ஆசிரியர் குறிப்பு | • கேலிச்சித்திரத்தைப் பாகமேற்று நடிக்க வழிகாட்டுதல். |

# வெற்றிப் பயணம்

**நிரல்படுத்துக.**




1. தேவையான பொருள்களைச் சேகரித்தல். [ ]
2. கண்காட்சிக்கு வைத்தல். [ ]
3. இயந்திர மனிதனை உருவாக்கும் வழிமுறைகளைப் படித்தல். [ 2 ]
4. இயந்திர மனிதன் தயார். [ ]
5. பொருள்களைச் சரியாகப் பொருத்துதல். [ ]
6. இயந்திர மனிதன் தயாரிக்கும் போட்டியை ஆசிரியர் அறிவித்தார். [ 1 ]




கற்றல் தரம் 3.4.1
- வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- நிரல்படுத்திய வாக்கியங்களை நடவடிக்கை நூல் பக்கம் 66-இல் வரிவடிவமாக எழுதப் பணித்தல்.

ந.நூ 66

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**







| | |
|---|---|
| **இணைமொழி** | **அருமை பெருமை** |
| **பொருள்** | சிறப்பு / உயர்வு / மேன்மை |

| | |
|---|---|
| கற்றல் தரம் 4.4.2 | ▪ மூன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| ஆசிரியர் குறிப்பு | • இணைமொழிகளைக் கொண்டு வாய்மொழியாக வாக்கியம் அமைக்கப் பணித்தல். |

ந.நூ 67





தமிழர்கள் **அன்றும் இன்றும்** விழாக்காலங்களில் வாழை இலையில் உணவு உண்பதை விரும்புகின்றனர்.

| | |
|---|---|
| **இணைமொழி** | **அன்றும் இன்றும்** |
| **பொருள்** | எந்தக் காலத்திலும் |



| | |
|---|---|
| கற்றல் தரம் 4.4.2 | ▪ மூன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| ஆசிரியர் குறிப்பு | • இணைமொழியைப் புத்தகக்குறியீட்டில் அழகுற எழுதப் பணித்தல். |

ந.நூ 68

தொகுதி 13

# தகவல் நேரம்

## பாடம் 1 எங்கள் சேவை

**கலந்துரையாடுக.**




ரூபினி பட்டு மாளிகையில் தீபாவளி மலிவு விற்பனை நடைபெறுகிறது.

| | |
|---|---|
| கற்றல் தரம் 1.5.2 | ▪ விளம்பரத்தில் உள்ள விவரங்களைக் கூறுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • பார்த்த தொலைக்காட்சி விளம்பரங்களில் உள்ள விவரங்களைக் கூறச் செய்தல். |

பாடம் 2 எங்களை நாடுங்கள்

வாசித்திடுக.






1. விளம்பரம் எதைப் பற்றியது?
2. எப்பொழுது திறப்புவிழா கண்டது?

| | | |
|---|---|---|
| கற்றல் தரம் 2.4.1 | ▪ விளம்பரம் தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர். | ந.நூ |
| ஆசிரியர் குறிப்பு | • விளம்பரத்தை அறிவிப்பாகச் செய்யப் பணித்தல். | 70-71 |

## பாடம் 3 உணவகம் செல்வோம்

அ. சொற்றொடரை உருவாக்குக.




1. ஊறுகாய்ப் புட்டி
2. ஒலிநாடாக் கருவி
3. இனிப்புப் பாயசம்
4. அப்பளப் பொரியல்
5. ______ மாதம்
6. ______ பட்டியல்



கற்றல் தரம் 3.2.26 ▪ உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • உருவாக்கப்படும் சொற்கள் உயிர் எழுத்தில் இருப்பதை உறுதி செய்தல்.

## ஆ. சொற்றொடரை உருவாக்குக.

1.


இறால் பொரியல்

2.



அதிரச மாவு

3.



✎ ஜாடி

4.


✎ கறி

5.



✎ ரிங்கிட்

6.



✎ புட்டி

உப்பு | ஔடதப் | இறைச்சிக் | ஐந்து

| கற்றல் தரம் 3.2.26 | ▪ உயிர் எழுத்தைக் கொண்டு தொடங்கும் சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். | ந.நூ 73 |
|---|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • படங்களை ஒட்டி சொற்றொடரை எழுதப் பணித்தல். | |

# பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**



**நேற்று**

அம்மா சமைத்தார்.

மாமா வந்தார்.

**இறந்த காலம்**



**இன்று**

அம்மா சமைக்கிறார்.

மாமா வருகிறார்.

**நிகழ்காலம்**



**நாளை**

அம்மா சமைப்பார்.

மாமா வருவார்.

**எதிர்காலம்**

கற்றல் தரம் 5.2.5
- இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- காலத்தைக் குறிக்கும் எடுத்துக்காட்டு வாக்கியங்களைத் திரட்டி ஒட்டச் செய்தல்.

தொகுதி 14

# வனம்

## பாடம் 1 விலங்குகளின் கொண்டாட்டம்

**கலந்துரையாடுக.**




**கிளை**

பறவைகள் **கிளை**யில் அமர்ந்துள்ளன.

கற்றல் தரம் 1.3.6 ▪ லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்.


ஆசிரியர் குறிப்பு • கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசப் பணித்தல்.

ந.நூ 75

## பாடம் 2 அதோ பாராய்

**வாசித்துப் பதில் காண்க.**






குதித்துக் குதித்து ஓடும்
**குதிரை** அதோ பாராய்!

அசைந்து அசைந்து **செல்லும்**
யானை அதோ பாராய்!



பறந்து பறந்து போகும்
பருந்து அதோ பாராய்!



நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை அதோ பாராய்!

தத்தித் தத்திப் போகும்
தவளை அதோ பாராய்!



துள்ளித் துள்ளி நாமும்
**பள்ளிச்** செல்வோம் வாராய்.

(*அழ.வள்ளியப்பா*)




1. கவிதையில் காணப்படும் விலங்குகள் யாவை?
2. இந்தக் கவிதையை எழுதியவர் யார்?
3. பறந்து போவது எது?



கற்றல் தரம் 2.4.2
▪ கவிதை தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
• கவிதை தொடர்பான வினாக்களுக்கு நடவடிக்கை நூல் பக்கம் 76-இல் பதிலளிக்கப் பணித்தல்.

ந.நூ 76

## பாடம் 3 அழகைப் பார்

**வாசித்து எழுதுக.**

# முயல் குட்டி




குட்டிக் குட்டி முயலுதான்
குறும்புத் தனம் செய்யுது
எட்டி எட்டிப் பிடிக்கையில்
எட்டச் செல்ல முயலுது!

குட்டையான கால்களால்
குதித்துக் குதித்து ஓடுது
நெட்டையான காதுகளால்
நீட்டி நீட்டிக் கேட்குது!

*(க. இராமச்சந்திரன்)*






| | |
|---|---|
| கற்றல் தரம் 3.1.13 | ▪ கவிதையைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • நடவடிக்கை நூல் பக்கம் 77-இல் கவிதையைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவதை உறுதி செய்தல். |

ந.நூ 77

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




**திருக்குறள்**

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (100)**

**பொருள்**

நன்மை தரும் இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்தாமல் தீமையை ஏற்படுத்தும் கடுஞ்சொற்களால் பேசுவது கனி இருக்கும்போது காயைப் பறித்துத் தின்பதற்கு ஒப்பாகும்.

கற்றல் தரம் 4.5.1

- மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு

- திருக்குறளையும் அதன் பொருளையும் வண்ணத்தாளில் அழகுற எழுதிக் காட்சிக்கு வைக்கச் செய்தல்.

ந.நூ 78

தொகுதி 15

# உணவு

## பாடம் 1 எனக்குப் பிடித்தவை

**கலந்துரையாடுக.**


கீரைக்கூட்டு


கேசரி


ரசம்





கறிப்பாப்


பருப்பு வடை



முறுக்கு


கருப்பஞ்சாறு

| | |
|---|---|
| கற்றல் தரம் 1.3.7 | ▪ ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • உணவுப் படங்கள் கொண்டு திரட்டேடு செய்து பேசச் செய்தல். |

ந.நூ 79

## பாடம் 2 வெங்காயம்



### வாசித்திடுக.

அப்பளம், தக்காளி, வெங்காயம் ஊரைச் சுற்றிப் பார்க்கச் சென்றன. அவ்வழியே வந்த சிறுமி அப்பளத்தை மிதித்து விட்டாள். அது நொறுங்கி **இறந்தது**. தக்காளியும் வெங்காயமும் கதறி அழுதன.



தொடர்ந்து மிதிவண்டியில் வந்த சிறுவன் தக்காளியை நசுக்கி விட்டான். "**நண்பர்கள்** இறந்த போது அழுவதற்கு நான் இருந்தேன். எனக்கு யார்?" என்று அழத் தொடங்கியது வெங்காயம்.



உடனே ஒரு தேவதை தோன்றி, "வெங்காயமே கலங்காதே, உன் இறப்பிற்கு யாரெல்லாம் காரணமாக இருக்கிறார்களோ அவர்களே உனக்காக அழுவர்," என்று கூறி மறைந்தது.

அன்று முதல் வெங்காயத்தை வெட்டுகின்றவர்களின் கண்களில் கண்ணீர் வரத் தொடங்கியது.



1. மூன்று நண்பர்களும் எங்குச் சென்றனர்?
2. அப்பளம் எவ்வாறு இறந்தது?



கற்றல் தரம் 2.4.3
- கதை தொடர்பான கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- நடவடிக்கை நூல் பக்கம் 80-இல் கதை தொடர்பான கேள்விகளுக்குப் பதில் அளிக்கச் செய்தல்.

ந.நூ 80

## பாடம் 3 தேநீர் நேரம்

**வாக்கியம் அமைத்திடுக.**



1. **குடும்பம்** - இது மிதுராவின் குடும்பம்.
2. **தேநீர்** - அனைவரும் தேநீர் அருந்துகின்றனர்.
3. **தாத்தா** - தாத்தாவிற்குக் கேசரி மிகவும் பிடிக்கும்.
4. **ஊட்டினார்** - அப்பா தங்கைக்கு ____________ .
5. **அம்மா** - அம்மா தேநீர் ____________ .
6. **மகிழ்ச்சி** - ____________ .

கற்றல் தரம் 3.3.9 ▪ எளிய வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • வேறு சில எளிய வாக்கியங்கள் அமைக்க வழிகாட்டுதல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

நேசன் : அன்பா, எனக்கு ஒரு சந்தேகம்? நான் உனக்கு உதவி செய்ததை அழியாத மையில் குறிப்பேட்டில் எழுதி வைக்கிறாய். அதே, உன்னை அடித்தால் எளிதில் அழியக் கூடிய பென்சிலில் எழுதுகிறாயே. ஏன்?

அன்பன் : நேசா! நாம் எப்பொழுதும் ஒருவர் செய்யும் குற்றத்தை மறந்துவிட வேண்டும். அவர் செய்யும் உதவியை என்றும் மறக்கக்கூடாது. அவ்வளவுதான்.



**திருக்குறள்**

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று. (108)**

**பொருள்**

ஒருவர் நமக்குச் செய்யும் உதவியை மறப்பது நல்லதல்ல. அவர் செய்யும் குற்றத்தை உடனே மறந்துவிடுவது நல்லது.

கற்றல் தரம் 4.5.1
- மூன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- திருக்குறளையும் பொருளையும் விளக்கிக் கூறச் செய்தல்.

ந.நூ 82

# தொகுதி 16 மறுபயனீடு

## பாடம் 1 வீசும் முன் யோசி



**கலந்துரையாடுக.**



நெகிழி

1. நெகிழியைக் கண்ட இடங்களில் வீசாதே.
2. நெகிழிப் பயன்பாட்டைக் குறைப்பது நன்று.



நாளிதழ்

1. பழைய நாளிதழ்களைச் சேகரித்து விற்கலாம்.
2. நாளிதழ்களை மறுபயனீடு செய்யலாம்.



துணி




கண்ணாடி

# பாடம் 2 மறுசுழற்சி

**வாசித்திடுக.**


1. நண்பர்களே, குப்பைகளைப் பிரித்துப் போடுங்கள்.




2. காகிதத்தை எங்குப் போடுவது?

3. நல்ல கேள்வி. நீலநிறக் குப்பைத்தொட்டியில் போடவும்.












## மறுசுழற்சி நம் முயற்சி

| | | |
|---|---|---|
| கற்றல் தரம் 2.1.24 | ▪ வாக்கியத்தைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | ந.நூ 84-85 |
| ஆசிரியர் குறிப்பு | • உரையாடலைப் போலித்தம் செய்யப் பணித்தல். | |

பாடம் 3 **மாற்றியோசி**

**வாக்கியங்களைக் கோவையாக எழுதுக.**

1


2


3


4


5



1. நெகிழிப் புட்டியை வெட்டிச் சுத்தம் செய்யவும்.

2. புட்டியை அழகுபடுத்தவும்.

3. வண்ணக் கற்களை அதனுள் போடவும்.

4. புட்டியில் நீரை நிரப்பவும்.

5. மீன்களைப் புட்டியில் விடவும்.

**கோவையாக எழுதுக.**

முதலில், நெகிழிப் புட்டியை வெட்டிச் சுத்தம் செய்யவும். அடுத்து, புட்டியை அழகுபடுத்தவும். தொடர்ந்து, வண்ணக் கற்களை அதனுள் போடவும். பின்னர், புட்டியில் நீரை நிரப்பவும். இறுதியாக, மீன்களைப் புட்டியில் விடவும்.

கற்றல் தரம் 3.4.2
- வாக்கியங்களைக் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- மீன் தொட்டியை வகுப்பில் செய்து பார்வைக்கு வைக்கச் செய்தல்.

ந.நூ 86-87

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**

லீ சூ லின் வேலைகளை **அரக்கப் பரக்கச்** செய்வாள். அவளுடைய வேலைகள் நேர்த்தியாக இருக்காது. அக்கா அவளைத் திட்டுவாள்.





பாட்டி சாலையைக் கடக்கத் தடுமாறினார். புவனா அவருக்குக் **கை கொடுத்தாள்**. பாட்டி அவளுக்கு நன்றி கூறினார்.

| மரபுத்தொடர் | பொருள் |
| --- | --- |
| **அரக்கப் பரக்க** | அவசரமும் பதற்றமும் |
| **கை கொடுத்தல்** | தக்க நேரத்தில் உதவி செய்தல் |



கற்றல் தரம் 4.6.1
- மூன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருள்களையும் மனனம் செய்து கூறச் செய்தல்.

# தொகுதி 17 வளமிகு மலேசியா

## பாடம் 1 சுதந்திரநாள்

**கலந்துரையாடுக.**




அண்ணா, எனக்கு **வண்ணத்தாளு வேணும்.**
அண்ணா, எனக்கு **வண்ணத்தாள் வேண்டும்.**

**எதுக்குத் தாளு**? என்ன செய்யப் **போற**?
**எதற்குத் தாள்**? என்ன செய்யப் **போகிறாய்?**

சுதந்திரநாள் **வருதுல** கொடி செய்யப் **போறேன்.**
சுதந்திரநாள் **வருவதால்** கொடி செய்யப் **போகிறேன்.**

கற்றல் தரம் 1.3.5 • பேச்சு வழக்குச் சொற்களைத் திருத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு • பேச்சு வழக்குச் சொற்களை அடையாளங்கண்டு திருத்திப் பேசச் செய்தல்.



# பாடம் 2 இரட்டைக் கோபுரம்

**வாசித்திடுக.**

கோலாலம்பூரின் பெருமைக்குரியவன் நான். என்னை இரட்டைக் கோபுரம் என்று அழைப்பர்.

என் கோபுரத்தின் உயரம் 451.9 மீட்டர் ஆகும். வியப்பாக இருக்கிறதா? அதோடு மட்டுமல்ல, நான் 88 மாடிகளைக் கொண்டவன். அலுவலகங்கள், கண்காட்சி அரங்குகள், பேரங்காடிகள், வங்கிகள், கேளிக்கை மையங்கள் போன்றவை என்னுள் அடங்கியுள்ளன.

இரவு வேளையில் நான் வண்ண விளக்குகளால் அழகாகக் காட்சியளிப்பேன். சுற்றுப்பயணிகளைக் கவரும் என்னை நீங்கள் பார்த்து விட்டீர்களா?

கற்றல் தரம் 2.1.25 ▪ பத்தியைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு • பதிவு செய்த வாசிப்பைச் செவிமடுத்து வாசிக்கச் செய்தல்.



ந.நூ ௧௦

# பாடம் 3 நம் அடையாளங்கள்

**வாக்கியம் அமைத்திடுக.**



ஜாலோர் கெமிலாங்

தேசியக் கொடி

நான்கு வண்ணங்கள்

மரியாதை

அழகானது

1. இது ஜாலோர் கெமிலாங்.
2. இது மலேசியாவின் தேசியக் கொடி.
3. கொடியில் நான்கு வண்ணங்கள் உள்ளன.
4. நாம் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்த வேண்டும்.
5. ______________________

கற்றல் தரம் 3.3.௯ — ▪ எளிய வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு — • மாநிலக் கொடி தொடர்பான வாக்கியங்களை அமைக்க வழிகாட்டுதல்.

## பாடம் 4 இலக்கணம்

**கலந்துரையாடுக.**

### தமிழைக் கற்போம் வாரீர்

இரண்டாம் வேற்றுமை உருபு (**ஐ**), நான்காம் வேற்றுமை உருபு (**கு**)க்குப் பின் **க்,ச்,த்,ப்** வரின் வலிமிகும்.



| | | | | |
|---|---|---|---|---|
| வீட்**டை** | + | **க**ழுவு | = | வீட்டை**க்** கழுவு |
| உல**கை** | + | **கா**ட்டு | = | உலகை**க்** காட்டு |
| அத்தைக்**கு** | + | **கொ**டு | = | அத்தைக்கு**க்** கொடு |
| அவருக்**கு** | + | **பி**டிக்கும் | = | அவருக்கு**ப்** பிடிக்கும் |
| நவினுக்**கு** | + | **கா**ய்ச்சல் | = | நவினுக்கு**க்** காய்ச்சல் |
| அரசிக்**கு** | + | **பி**றந்தநாள் | = | அரசிக்கு**ப்** பிறந்தநாள் |
| சன்ன**லை** | + | **தி**ற | = | |
| அம்மாவிற்**கு** | + | **ச**ங்கிலி | = | |

| கற்றல் தரம் 5.4.1 | ▪ இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகளுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கப் பணித்தல். |

# தொகுதி 18 உயிரினங்கள்

## பாடம் 1 நம்மைச் சுற்றி

**செவிமடுத்துக் கூறுக.**

1. மின்மினிப் பூச்சி ஒளிவிடும்.



2. எறும்பு கூட்டமாகச் செல்லும்.



3. பூரானுக்கு நிறைய கால்கள் உள்ளன.



4. தேனீ பூக்களிலிருந்து தேனை உறிஞ்சும்.



5. தட்டான்பூச்சிக்கு நான்கு இறக்கைகள் உள்ளன.



| கற்றல் தரம் 1.2.5 | ▪ செவிமடுத்த எளிய வாக்கியங்களைக் கூறுவர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • வாக்கியங்களைச் செவிமடுத்து மீண்டும் கூறச் செய்தல். |

## பாடம் 2 உயிரினங்கள் பலவிதம்

### அ. வாசித்திடுக.





கொக்கு பற பற
கோழி பற பற
மைனா பற பற
மயிலே பற... (x2)



என் பட்டமே பற பற பற
வானம் தாண்டிப் பற பற
என் நெஞ்சமே பற பற பற
எல்லைகள் இல்லை பற பற!

(நா. முத்துக்குமார்)





வருடுக

| கற்றல் தரம் 2.3.4 | ▪ பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர். |
|---|---|
| ஆசிரியர் குறிப்பு | • QR குறியீட்டின் துணையுடன் பாடலைக் குழுவாகப் பாடச் செய்தல். |

# பாடம் 3 வண்ணத்துப்பூச்சி



**வாசித்து எழுதுக.**

## வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி




1. வண்ணத்துப்பூச்சி இலையின் அடியில் முட்டையிடும்.
2. முட்டையானது இரண்டு வாரத்தில் கம்பளிப் புழுவாகும்.
3. கம்பளிப் புழு கூட்டுப்புழுவாக உருமாறும்.
4. கூட்டுப்புழு இரண்டு வாரத்திற்குப்பின் வண்ணத்துப்பூச்சியாக முழுமை பெறும்.

கற்றல் தரம் 3.4.2
- வாக்கியங்களைக் கோவையாக எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- நடவடிக்கை நூல் பக்கம் 95-இல் வாக்கியங்களைக் கோவையாக எழுதப் பணித்தல்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




கம்போங் முகிபா மக்கள் விழாக்காலங்களில் ஒன்றிணைந்து சமைத்து உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால், திரு. கபிலன் மட்டும் அதில் கலந்து கொள்வதில்லை. ஊருடன் பழகுவதும் இல்லை. ஒருநாள் நோய்வாய்ப்பட்டார். உதவிக்கு யாரும் இல்லாமல் சிரமப்பட்டார்.

அவரின் நிலையறிந்த அண்டை அயலார் அவருக்கு உதவினர்.

திரு. கபிலன் விரைவில் குணமடைந்தார். அப்பொழுதுதான் **ஊருடன் கூடி வாழ்**வதன் அவசியத்தை உணர்ந்தார்.

**பழமொழி** — **ஊருடன் கூடி வாழ்**

**பொருள்** — நாம் வாழும் இடத்து மக்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அவர்களோடு இணைந்து வாழ வேண்டும்.



கற்றல் தரம் 4.7.1
- மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு
- பழமொழியையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறச் செய்தல்.





# அறிவோம்



## பாடம் 1 என்னை அறி

**கலந்துரையாடுக.**



- நான் **நீலத் திமிங்கலம்**.
- **பாலூட்டி** இனத்தைச் சேர்ந்தவன்.
- சுவாசிக்க மட்டுமே **கடலின் மேலே** வருவேன்.



- நான் மண்ணில் **வாழும்** உயிரினம்.
- என்னை **மண்புழு** என்பர்.
- நான் **உழவர்களின் தோழன்**.



- நான் **தவளை.**
- என் நாக்கு **நீளமானது**.
- நான் **நீரிலும் நிலத்திலும்** வாழ்வேன்.

கற்றல் தரம் 1.3.6 ▪ லகர, ழகர, ளகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு • கைப்பாவையின் துணையுடன் போலித்தம் செய்யப் பணித்தல்.

ந.நூ ௯௭

பாடம் 2

# கண்டறிவோம்

**வாசித்திடுக.**



6 கோலாலம்பூர் மலேசியாவின் தலைநகரம்.

7 நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதலில் கால் பதித்தவர்.

8 பசிபிக் பெருங்கடல் உலகின் மிகப் பெரிய கடலாகும்.


9 ஔவையார் ஆத்திசூடியை இயற்றினார்.





| | | |
|---|---|---|
| கற்றல் தரம் 2.2.5 | ▪ எளிய வாக்கியத்தை வாசித்துப் புரிந்து கொள்வர். | ந.நூ ௯௮-௯௯ |
| ஆசிரியர் குறிப்பு | • எளிய வாக்கியங்களை வாசித்துப் புதிர்ப்போட்டியில் விடை காணச் செய்தல். | |

## பாடம் 3 திருந்திய உள்ளம்

**வாக்கியங்களை நிரல்படுத்துக.**





பிறகு, குச்சிகளை இணைத்துக் கட்டி உடைக்கச் சொன்னார்.

1 சகோதரர்கள் இடையே ஒற்றுமை இல்லாததால் தந்தை அவர்களைத் திருத்த எண்ணினார்.

இறுதியாக, நால்வரும் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து திருந்தினர்.

அவர்களுக்கு ஆளுக்கொரு குச்சியைக் கொடுக்க, அவர்கள் சுலபமாக உடைத்தனர்.

ஒன்றாகக் கட்டப்பட்டிருந்த குச்சிகளை அவர்களால் உடைக்க முடியாமல் போனது.

**கதைக்கேற்ற பழமொழியைக் கூறுக.**

| | |
|---|---|
| கற்றல் தரம் 3.4.1 | ▪ வாக்கியங்களை நிரல்படுத்தி எழுதுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • நிரல்படுத்திய வாக்கியங்களை நடவடிக்கை நூல் பக்கம் 100-இல் எழுதச் செய்தல். |

ந.நூ 100-101

# இலக்கணம்

**கலந்துரையாடுக.**

## தமிழைக் கற்போம் வாரீர்

**வேற்றுமை**

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.
- வேற்றுமை எட்டு வகைப்படும்.

| வகை | உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| **முதல் வேற்றுமை** | உருபு இல்லை | **குமரன்** கதை எழுதினான். |
| **இரண்டாம் வேற்றுமை** | ஐ | அம்மா **குமரனைக்** காணச் சென்றார். |



**சரியான வேற்றுமை வகைகளை அறிக.**

அ. **முயல்** துள்ளி ஓடியது.

ஆ. **சுபா** குடை வாங்கினாள்.

இ. **திலகா** வேகமாக நடந்தாள்.

ஈ. ஆசிரியர் **மாணவனை** அழைத்தார். (மாணவன் + ஐ)

உ. தங்கை **புத்தகங்களை** அடுக்கினாள். (புத்தகங்கள் + ஐ)

ஊ. அம்மா **மகளைக்** கொஞ்சினார். (மகள் + ஐ)

கற்றல் தரம் 5.2.6
- முதலாம், இரண்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- வேறு சில வாக்கியங்களில் முதலாம் இரண்டாம் வேற்றுமை உருபுகளைப் பார்த்து எழுதச் செய்தல்.

ந.நூ 102

தொகுதி 20

# கொண்டாட்டம்

## பாடம் 1 சிறப்பு நாள்கள்


**கலந்துரையாடுக.**




| | |
|---|---|
| கற்றல் தரம் 1.3.7 | ▪ ரகர, றகர எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர். |
| ஆசிரியர் குறிப்பு | • ரகர, றகர சொற்களைப் பாடப்பகுதியில் அடையாளங்கண்டு பேசச் செய்தல். |

ந.நூ 103

## பாடம் 2 வாழ்த்துக் கூறுவோம்



### வாசித்திடுக.

நாளை அன்னையர் நாள். சாருமதியிடம் பரிசு வாங்கப் போதிய பணமில்லை. தன் தாயாருக்கு என்ன பரிசு தருவதென்று யோசித்தாள். உடனே, வாழ்த்து அட்டை நினைவிற்கு வந்தது. ஆசிரியர், அதனைச் செய்யும் முறையைக் கற்பித்ததை நினைவு கூர்ந்தாள். அழகான வாழ்த்து அட்டையைச் செய்தாள்.



மறுநாள் தன் தாயாரிடம் அதனைக் கொடுத்தாள். தாயாரின் முகத்தில் அளவற்ற மகிழ்ச்சி தென்பட்டது. சாருவை அன்போடு அணைத்துக் கொண்டார்.








கற்றல் தரம் 2.1.25
- பத்தியைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு
- வாழ்த்து அட்டையைச் செய்து பார்வைக்கு வைக்கப் பணித்தல்.

## பாடம் 3 திறந்த இல்ல உபசரிப்பு

**வாக்கியம் அமைத்திடுக.**




**தீபாவளி**

1. தீபாவளி திறந்த இல்ல உபசரிப்பு நடைபெற்றது.

**தீபம்**

2. வாசலில் தீபம் ஏற்றி வைத்தனர்.

**உறவினர்கள்**

3. உறவினர்கள் கலந்து கொண்டனர்.

**பலகாரங்கள்**

4. பலவகையான பலகாரங்கள் பரிமாறப்பட்டன.

**மகிழ்ச்சி**

5. ______________________________

கற்றல் தரம் 3.3.7 ▪ எளிய வாக்கியம் அமைப்பர்.

ஆசிரியர் குறிப்பு • படத்தைப் பார்த்து மேலும் சில வாக்கியங்களை எழுதப் பணித்தல்.

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**கலந்துரையாடுக.**




| | |
|---|---|
| **பழமொழி** | **சிறு துளி பெரு வெள்ளம்** |
| **பொருள்** | சிறுகச் சிறுகச் சேர்க்கின்ற ஒன்றே நாளடைவில் பேரளவாகப் பெருகிவிடும். |



கற்றல் தரம் 4.7.1 • மூன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு • பழமொழியையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறப் பணித்தல்.

Dengan ini, SAYA BERJANJI akan menjaga buku ini dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya, serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan.

Skim Pinjaman Buku Teks

Sekolah ____________________________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan: ________________________________

Tarikh Penerimaan: ________________________________

BUKU INI TIDAK BOLEH DIJUAL



ISBN 978-983-49-2039-5
9 789834 920395
BT043002